24th April 1959]

SRI D. S. AUTHIMOOLAM : இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற பதிலில் கன்யாகுமரி ஜில்லாவில் நிறைய வேலைகள் நடப்பதாக தெரிகிறது. ஆனால் செங்கோட்டை தாலுகாவில் இரண்டு மூன்று வேலைகள்தான் நடப்பதாக பதிலில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் செங்கோட்டை தாலுகாவில் அநேக நதிகள் இன்வெஸ்டிகேட் செய்யப்படாமல் இருக்கிறது. அவைகளை இன்வெஸ்டிகேட் செய்ய வேண்டும். பல வேலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து பல மகஜர்கள் வந்திருக்கின்றன. அவைகளின் நிலைமை என்ன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தமிழ் நாட்டைச் சேர்ந்த கன்யாகுமரி ஜில்லாவுக்கு அதிகப்படியான நன்மை செய்ய வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய முக்கிய நோக்கமாகும். அங்கே சில சமயங்களில் பருவ மழை தவறி விடுகிறது. மழை பெய்யக்கூடிய காலங்களில் அதிகப் படியான தண்ணீர் வருகிறது. அவைகளை சேதம் செய்யாமல் அணைக் கட்டுகளைக் கட்டி தேக்கி வைக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. அப்படி அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு சாதனங்கள் அங்கே இருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவிலும் பல திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அங்கும் பல திட்டங்களை எடுத்து நடத்தப்படும்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : கடவனுறு திட்டம் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்?

THE HON. SRI P. KAKKAN : இது ஒரு சாதகமான திட்டம்தான். அந்த திட்டத்தை கூடிய சீக்கிரம் எடுத்துக்கொள்வதற்கு முயற்சி செய்யப் படும்.

Chinese method of cultivation

* 150 *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the yield per acre said to be obtaining in China by adopting the Chinese method of cultivation; and

(*b*) some special aspects about the method?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) "No, Government have no idea about this matter."

(*c*) The special aspects of this method are deep ploughing up to a depth of about one meter, very close planting, placement of fertilizers in lower depths and double transplanting of paddy.

SRI S. LAZAR : இதைப்பற்றி தகவல் ஏதாவது அரசாங்கத் தினிடம் வந்திருக்கிறதா ? அதைப்பற்றி பரீட்சை செய்வதற்கு அரசாங் கத்திற்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய விவரங்கள் அரசாங்கத்திடம் இல்லை. அதனால் அதைப்பற்றி பரீட்சை செய்வதற்கு இல்லை. மத்திய சர்க்கார் சில நிபுணர்களை அனுப்பி அதைப்பற்றி சீக்கிரம் பார்த்து வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

SRIMATHI HEMALATHA DEVI : சீன முறை விவசாயத்தைப் பற்றி நன்கு பரிசீலித்தபின் அதைப்பற்றி பிரசாரம் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பரீட்சை செய்த பிறகு தான் பிரசாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். பரீட்சை முடிந்த பிறகுதான் பிரசாரம் செய்யும் வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI S. LAZAR : மத்திய உணவு மந்திரி அவர்கள் இந்த திட்டத்தின் மூலமாக ஏக்கர் ஒன்றுக்கு 360 டன் உற்பத்தி செய்யலாம் என்று சொல்லியிருக்கிறாரா ? அப்படி சொல்லியிருப்பது இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா. மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இது பற்றிய தகவல் வந்திருக்கிறதா இந்த அரசாங்கத்திற்கு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 360 டன் என்பது சரியல்ல என்று அந்த அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார். 360 என்பதற்கு பதிலாக 3.6 என்று இருக்கலாம்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—ADJOURNMENT MOTION *RE* ACCIDENT TO A PASSENGER BUS IN THE KUNDAH-KARAMADAI PROJECT ROAD ON 23RD APRIL 1959.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri T. S. Ramaswamy Pillai to discuss a definite matter of urgent public importance, viz., the ghastly accident that happened to a passenger bus at about 4 p.m. yesterday (23rd April 1959) in the Kundah-Karamadai Project Road resulting in the death of 17 passengers on the spot and injuring many seriously. If the Hon. Minister has any information to give, he may give.

2 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM : Government do not have any further information now beyond what has been stated in the motion. The Hon. Minister in charge of Transport has proceeded to the spot and we hope to get more details later. I think Government will be in a position to make a statement by about Monday.

MR. SPEAKER : Then we will take it up on Monday, the 27th April.

III.—ANNOUNCEMENT *RE* NOTICE OF AMENDMENTS OR SUGGESTIONS TO THE ANDHRA PRADESH AND MADRAS (ALTERATION OF BOUNDARIES) BILL, 1959.

MR. SPEAKER : I fix 3 p.m. on Saturday, the 25th April, 1959 as the last hour and date for the receipt of amendments or suggestions to the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Bill, 1959.